1989 நவம்பர் 1]

5 (ii). சட்ட முன்வடிவுகள் (ஆய்வு)—தொடர்ச்சி.

(2) மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"28—9—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. முதலில் பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவு மாநகராட்சி தனி அலுவலர்களின் பணிக் காலத்தை நீட்டிப்பதற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு குறிப்பிட்டிருக்கின்ற காரணம் எப்படி இருந்தாலும் விளக்கக் குறிப்பிலே, ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும், அந்தக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்து அ∴து

* 31-10-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பரிசீலனையில் இருப்பதாகவும், குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அதன்மீது முடிவு எடுக்க இயலாத காரணத்தால் தள்ளிவைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆழ்ந்து சிந்தித் துப் பார்த்தால் இது சாதாரணமாக ஒரு போலியான காரணம் என்றே நம்ப இடம் ஏற்படுகிறது. தேர்தல் நடத்த வேண்டும், நடத்த வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தபோதெல்லாம் நடத்துகிறோம், நடத்துகிறோம்; சொன்னதைச் செய்வோம் என்று இந்த அரசு சொல்லியது; செய்வதைச் சொல்வோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப்

(13-55)

அவர்கள் கூட தேர்தலை ஒரு நாள் இரண்டு நாள் தள்ளி வைக்க முடியுமா என்று கேட்டுக் கொண்ட காலம் கூட இருக்கிறது. அப்போதெல்லாம் நினைத்துக் கொண்டேயிருந்தோம், உடனடி யாக தேர்தல் நடந்துவிடும் என்று. புலி வருகிற கதையாக இந்த தேர்தல் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அதற்கு நீங்கள் கண்டுபிடித்த காரணமாக இருக்கிறது என்று நினைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப் பிடவிரும்புகிறேன்.

18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வேண்டும், அதற்குப் பின்னாலே தேர்தல் நடத்தவேண்டுமென்று நாங்கள் குறிப்பிட்ட போது, இல்லை, இல்லை உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற வாதம் இங்கே எடுத்து வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே இப்போது நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தால் தேர்தல்கள் மேலும் மேலும் தள்ளிவைக்கப்படுவது உள்நோக்கத் தோடு நடத்தப்படுகிறதோ என்ற எண்ணத் தோன்றுகிறது. அது மட்டுமல்ல, கோப்புகளை இரவோடு இரவாக பார்த்து எங்கெங்கே தவறுகள் இருக்கிறதோ அவைகளையெல்லாம் கண்டறிந்து விரைவிலே நடவடிக்கை எடுப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சொன்னதைச் செய் வோம் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட பரிசீலனையை ஒரே இரவில் நடத்திவிட முடியும். அதை வேண்டுமென்றே காலம் தாழ்த்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 நவம்பர் 1] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அதுமட்டுமல்ல, தேர்தல் நடத்தாமல் தப்பிப்பதற்கு இந்த அரசு சாக்கு போக்கு கூறிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம ஏற்பட இதனால் வழி ஏற்படும் என்று குறிப்பிட்டு, பொதுவாகவே மதுரை, மருங்காபுரி தேர்தல்களுக்குப் பின்னாலே தேர்தலைச் சந்திப்பதற்குத் தயங்குகிறார்கள் என்ற எண்ணத்தையும் தெரிவித்து, என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து, இந்த முன் வடிவை எதிர்த்து அமைகிறேன், வணக்கம்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடிய இந்த தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசாங்கம் நீண்ட நெடுங்காலமாக மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்ததும், அதன் விளைவாக இந்த 3 மாநகராட்சிப் பகுதிகளில் இருக்கிற மக்கள் தாங்கள் விரும்புகிற மக்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்து அந்த மூன்று மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு வாய்ப்புக் கிடைக் காத ஒரு சூழ்நிலையில் தொடர்ந்து இருக்கிற சூழ்நிலையில் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில் சில தவிர்க்க முடியாத காரணங்களால் ஏற்கெனவே அது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில் இன்றைக்கு மேலும் 6 மாதகாலம், மார்ச் 31-ந் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கிற இந்த ஒத்திவைப்பு என்பது கடைசியாக இருக்கவேண்டும், அடுத்து மார்ச 31-ந் தேதிக்கு உள்ளாக திட்ட வட்டமாக இந்த 3 மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்தி முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டு மென்று இந்த சந்தர்ப்பத்திலே வலியுறுத்துவதோடு, ஏற்கெனவே இதே மன்றத்தில் 21 வயது நிரம்பிய வாக்காளர்களைக் கொண்டு தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு சட்ட திருத்தம் இதே மன்றத்திலேயே திருத்தப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன்றத்தில் பல உறுப்பினர் களின் வேண்டுகோளுக்கிணங்க 18 வயது நிரம்பிய வாக்காளர் களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும் கூட ஏற்கெனவே திருத்தப்பட்டிருக்கிற

அந்த சட்டத்தை 18 வயதான வாக்காளர்களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும் என்று அதையும் திருத்தி உரிய காலத்தில் இந்த மாநகராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவில் பேசுகிற வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய அருமை உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு பதவி ஏற்றுக் கொண்ட உடன் மாநகராட்சிகளுக்கு நடத்தவேண்டிய தேர்தல்களை நாங்கள் உடனடியாக நடத்துவோம் என்று சொன்னார்கள். பிப்ரவரி மாதம் அதைப்பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த நேரத்திலுங்கூட, எடுத்துச் சொன்னோம். கடந்த 14, 15 ஆண்டுகளாக தேர்தல் நடைபெறவில்லை. மாநகராட்சிகள் எல்லாம் சீர் கெட்டு இருக்கிறது, ஆகவே உடனடியாக தேர்தல் நடத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு எடுத்துச் சொல்லப்பட்ட காரணங்கள் எல்லாம், ரம்சான் பண்டிகை வருகிறது என்பதுதான். அந்தப் பண்டிகையை ஒட்டி நீங்கள் ஓரளவுக்காவது தள்ளி வையுங்கள் என்றும் கேட்டுக்கொண்டதாகச் சொன்னார்கள். 18 வயது நிறைந்த வாக்காளர் பட்டியலைத் தேர்தல் கமிஷன் மே மாதம் 21 ஆம் தேதியே தயாரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள் அந்தப் பதினெட்டு வயது வாக்காளர்களையும் சேர்த்து தேர்தல்

(14-00)

வையுங்கள் என்று சொன்னபோது கூட அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். ஆனால் பின்னர் மதுரையிலும், மருங்காபுரியிலும் தேர்தல் நடந்து முடிந்த பிறகு இந்தத் தேர்தலானது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று இன்றைக்குப் பரவலாக மக்களால் பேசிக்கொள்ளப்படுகிறது.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு உள்ள நிலைமையிலே சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் மிகவும் சீர்கேடு ஏற்பட்டு இருக்கின்ற ஒரு நிலைமையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நம்முடைய தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள் இருக்கின்ற இல்லத்திற்குச் செல்கிற வழியில் கூட கடந்த நான்கைந்து மாதங்களாகக் குப்பைகள் சீர் செய்யப் படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட கொடுமையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்ல. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான பல்வேறிடங்களில் இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற ஒரு கொடுமையான நிலைமையும் இருந்துகொண்டு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை என்.எஸ்.ஸி. போஸ் ரோட்டிலே உள்ள, 1959 ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட, என்னுடைய உறவினர் ஒருவரால் கட்டித்தரப்பட்ட தொட்டி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற காரணத்தால், மறைக்கப்படுகிற அளவுக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிற அளவுக்கும் அந்த ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டிருக் கிறது என்று சொன்னால் அந்த அளவுக்கு நிலைமைகள் மோசமாகி இருக்கின்றன. இதனை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. தேர்தலை நடத்தவேண்டும் என்று சொல்கிற பொழுது சென்னையைப் பொறுத்தவரையில் கள்ள வாக்குகள்தான் மிக அதிகமாக இருக்கின்றன. எனவே வாக்காளர்களுக்குப் போட்டோக்கள் ஒட்டிய அடையாள அட்டையை வழங்குகிற அளவிலே விரைவிலே ஏற்பாடு செய்வதுடன் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கிற பட்டியலை அரசு விரைவில் வெளியிட்டு தேர்தலை நடத்துகிற அளவுக்குக் கருத்துக்களைச் சொன்னோம். ஏற்கெனவே தேர்தல் கமிஷன் மூலமாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வாக்காளர் பட்டியலைக் கூட பயன்படுத்தி மேலும் காலதாமதம் இல்லாமல் தேர்தலை நடத்தி, மக்களின் பிரதிநிதிகள் மூலமாக செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்குரிய வழிவகைகளை இந்த அரசு வழங்கவேண்டுமென்று கேட்டு இந்த அளவிலே தேர்தலை ஒத்தி வைப்பதற்காகக் கொண்டுவரப்படுகிற சட்டமுன்வடிவை எதிர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்தக் கால நீட்டிப்பு ஏற்கெனவே சட்டப்பேரவை உறுப்பினர்களிடத்திலிருந்தும், வெளியே இருந்தும் வந்த பல்வேறு கருத்துக்களை ஒட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் அமைந்தது என்பதை இந்த மன்றம் அறியும். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் இந்த அரசு மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் 21 வயது பூர்த்தியடைந்த வாக்காளர்களைக் கொண்டு அதாவது சட்டமன்ற வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தேர்தலை இந்த ஆண்டு மே மாதம் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டத் திருத்தம் சட்டமன்றத்திலே 15—2—1989 அன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் இதே மன்றத்திலேயும், வெளியிலேயும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதாவது ரம்சான் பண்டிகை மே மாதம் 7 ஆம் தேதி முடிவடைவதால் தேர்தல்களை சிறிதுகாலம் தள்ளி வைக்க வேண்டுமென்று சட்டமன்றத்தில் கோரிக்கைகள் எழுப்பப்பட்டதன் அடிப்படையிலேயும், மேலும் 18 வயது வந்தவர்கள் பெயர்களை மாநகராட்சித் தேர்தல் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டும் என்று கோரிக்கை சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட அடிப்படையிலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளை ஏற்று 18 வயதுடைய வாக்காளர்களைக் கொண்ட பட்டியலின் அடிப்படையிலே ஜூலை மாதம் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று 3—4—1989 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். அதற்கேற்ப புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8—4—1989 அன்று மாநகராட்சி வார்டுகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் தனி இட ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு ஆராயும் என்று—மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இங்கே பேசியதற்கேற்ப அந்தக் கருத்தையும் ஏற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்கு ஏற்ப சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சி சட்டங்களில் தனி ஒதுக்கீடு குறித்தும், கோ-ஆப்ட் குறித்தும் சட்டத் திருத்தங்கள் 11—5—1989 அன்று நிறைவேற்றப்பட்டது. மாநகராட்சிகளில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கும் தனி ஒதுக்கீடு செய்ய வேண்டிய

1989 நவம்பர் 1] [திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்]

வார்டுகளைத் தேர்ந்தெடுக்க திரு. டி. வி. வெங்கடகிருஷ்ணன் என்கிற மூத்த ஐ.எ.எஸ். அதிகாரி தலைமையில் குழு ஒன்று இதற்காக அமைக்கப்பட்டு, மாநகராட்சிகளின் தனி அதிகாரிகள், ஆணையாளர்கள் மற்றும் அந்தந்த மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்றை அரசு பெற்றுள்ளது. அதன்படி வாக்காளர்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு சமமாக இருக்குமாறு புதிதாக பிரித்து அதன்பின் தனி ஒதுக்கீடு வார்டுகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்கிற பொதுவான கருத்தை குழு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை தற்போது அரசின் ஆய்வில் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நடந்த பிறகு, தனி ஒதுக்கீடு செய்வது பற்றி குழுவின் அறிக்கையின்மேல் எடுக்கப்படும் முடிவுக்கு ஏற்ப மாநகராட்சி தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளில் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் இவ்வாண்டு செப்டம்பர் மாதம் முடிவடைய இருந்தது. அப்போது சட்டமன்ற கூட்டம் நடைபெறாததால் இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1990 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டித்து 1981 ஆம் ஆண்டு மாநகராட்சிச் சட்டத்தை, 4 ஆம் திருத்த அவசரச் சட்டமாக ஆளுநரிடமிருந்து ஒப்புதல் பெற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் கால நீட்டிப்பு செய்யப்பட்டது என்பதோடு மட்டுமல்லாமல், இன்னொன்றையும் இங்கே பேசும்போது உறுப்பினர்கள் சொன்னார்கள்.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்று சொல்லிவிட்டு, ஏன் அவ்வாறு செய்யவில்லை என்று இங்கே கேட்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற 9 மாத காலத்தில் "சொன்னதைச் செய்திருக்கிறது" என்பதை நாட்டு மக்கள் மிகவும் நன்றாக அறிவார்கள். அதுபோல கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணமாக அமைந்தது என்னவென்றால் மத்திய அரசு பஞ்சாயத்து ராஜ், நகர பாலிகா என்கிற

சட்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தது. அந்த அரசியல் சட்டத் திருத்தம் ஒருவேளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டால் நாம் பழைய முறையிலே தேர்தலை நடத்தினாலும்கூட அதை மீண்டும் மாற்றி தேர்தலை நடத்த வேண்டிய ஒரு அவசியம், கட்டாயம் இங்கே ஏற்படும். ஆகவே, இந்தக் காரணங்களை எல்லாம் ஒட்டித்தான் ஒத்திவைக்கப் பட்டது. மார்ச் மாதம் அந்த குறிப்பிட்ட தேதிக்குள் இந்த அரசு தேர்தலை நடத்த எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்து, இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமியின் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 38/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

In Clause 2 *for* the words "31st day of March 1990", *substituted* the words "31st day of January 1990".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

1989 நவம்பர் 1]

திரு. மா. சுந்தரதாஸ் : இந்தத் திருத்தத்திற்கு காரணம், கடந்த அரசும் இதுபோல சட்டத் திருத்தம் கொண்டு வருவது வழக்கம். குறிப்பாக அப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்கள் பிரச்சினையாகத்தான் இதனைப்பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சென்னை நகரைச் சார்ந்தவர்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் நீங்கள் வந்த உடனேயே தேர்தலை நடத்துவீர்கள் என்றுதான் நான் எதிர் பார்த்தேன். இப்படி தேர்தலுக்கான நாளை நீட்டித்துக் கொண்டே போவது நல்லதல்ல என்பது என் கருத்து. இங்கே அமைச்சர் அவர்கள் பல்வேறு காரண காரியங்களை எல்லாம்

(14.10)

சொன்னார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன், இப்படி நாளை நீட்டித்துக்கொண்டு போக வேண்டிய அவசியமில்லை. ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் பெண்களுக்கும் அரிஜனங்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போதுதான் பாராளுமன்றத் தேர்தலுக்காக 18 வயதான வர்கள் வாக்காளர் பட்டியல் தயாராகி இருக்கிறது. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குப் பார்த்தாலே தெரியும். எங்கே அரிஜன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள், எங்கே பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று. அதைப் பார்த்து செய்தால் போதும். அதற்கு மார்ச் மாதம் வரை தேவையில்லை. ஜனவரியிலேயே முடிக்க முடியும். எனவே நவம்பரிலே பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே தேர்தல் அறிவிக்கை செய்தால், 1990 ஜனவரிக்குள் நிச்சயமாக 3 மாநகராட்சிகளிலும் தேர்தல்களை நடத்த முடியும். அந்த 3 மாநகராட்சிகளிலும் மக்களாட்சி உருவாக வழி ஏற்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். நிச்சயம் அமைச்சரவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன். 1969-லிருந்து இந்த மாநகராட்சிகளின் தேர்தல்கள் நடக்கவில்லை. மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் அது கலைக்கப்பட்டது. ஜனநாயக மரபுக்கு இது சரியானதல்ல என்று சொல்லி, தயவு செய்து இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்

(திரு. மா. சுந்தரதாஸ்) [1989 நவம்பர் 1

கிறேன். திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும்கூட, "நாங்கள் செய்வோம்" என்ற ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்தால், அதை நாங்கள் அஷ்யூரன்ஸ் கமிட்டியில் பார்த்துக்கொள்வோம்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மார்ச் என்று சொல்கிற காரணத்தாலே, அதற்குள்ளே ஜனவரியும் அடங்கியிருக்கிறது. மார்ச் வரையிலே காலக்கெடு கேட்கிறோம். அதற்குள்ளேயே எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடத்த இந்த அரசு முன்வரும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு முதல்வரவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நான் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 2, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"In Clause 3 *for* the words "31st day of March 1990", *substitute* the words "31st day of January 1990".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1989 நவம்பர் 1] (திரு. மா. சுந்தரதாஸ்)

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 மற்றும் 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 38/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2—11—1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

168. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப்பாய (நிதி மற்றும் நிருவாக அதிகாரங்கள்) விதிகளை வகுப்பது குறித்து பணியாளர்—நிருவாகச் சீர்திருத்தம் துறையின் 1989 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு நிருவாகத் தீர்ப் பாயச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 13/1985) 37(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]